10.02.2025. S.C.No.14 of 2020 P.W. 1 (**சுமன்**)

Crl.M.P.No. 169 of 2025 உத்தரவு நாள் 31.01.2025–ன் கீழ் அ.சா.1 சுமன் மீண்டும் வரவழைக்கப்ட்டு 2–ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை

(A1 present. A2 absent and his absence condoned u/s 317 of CrPC petition)

நான் 9 வது வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுத படிக்க பேச தெரியும். 2 ம் எதிரி ராஜாவுக்கும் எனக்கும் நேரடி தொடர்பு எதுவும் இல்லை. வழக்கு சம்பவத்திற்கு முன்பு நான் 2–ம் எதிரியை பார்த்தருக்கிறேன், ஆனால் பேசியது இல்லை பழகியது இல்லை. 2–ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் எதிரி சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல.

2–ம் எதிரி சம்பவ இடத்தில் இருந்தார். போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க புகாரில் கையொப்பம் போட்டேன் என்றும் 2–ம் எதிரிக்கும் இந்த சம்பவத்திற்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. 2–ம் எதிரி சம்பவ இடத்தில் இருந்தார். முதலில் 1 ம் எதிரி ரமேஷ் வெட்டினார் பின்னர் 2–ம் எதிரி ராஜா வெட்டினார். எதிரிகள் வெட்டியதை நான் பார்த்திருந்தால் நான்தான் புகார் கொடுத்திருப்பேன் என்றும் புகாரை நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

மேலும் 1ம் எதிரி தரப்பில் இந்த சாட்சியுடன் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை 2–ம் எதிரியின் வழக்கறிஞர் ஏற்றுக்கொண்டார்.

**மறுவிசாரணை– இல்லை**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.02.10 17:50:19 +0530

10.02.2025. S.C.No.14 of 2020 P.W. 3 (மகேந்திரன்)

Crl.M.P.No. 169 of 2025 உத்தரவு நாள் 31.01.2025–ன் கீழ் அ.சா.3 மகேந்திரன் மீண்டும் வரவழைக்கப்ட்டு 2–ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை

(A1 present. A2 absent and his absence condoned u/s 317 of CrPC petition)

1ம் எதிரி தரப்பில் இந்த சாட்சியிடம் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை 2–ம் எதிரியின் வழக்கறிஞர் ஏற்றுக்கொண்டார். மேலும் தொடர்ந்து குறுக்கு விசாரணை

2ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் போலீசார் சொல்லி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் நான் பொய் சாட்சியம் அளிக்கவில்லை.

மறுவிசாரணை– இல்லை

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.02.10 17:50:30 +0530

10.02.2025

S.C.No.14 of 2020

P.W. 7 (மருத்துவர் நாகேந்திர குமார்)

Crl.M.P.No. 169 and 170 of 2025 உத்தரவு நாள் 31.01.2025-ன் கீழ் அ.சா.7 மருத்துவர் நாகேந்திர குமார் மீண்டும் வரவழைக்கப்பட்டு 1ம் எதிரி மற்றும் 2-ம் எதிரியின் தரப்பில் தனித்தனியாக குறுக்கு விசாரணை

(A1 present. A2 absent and his absence condoned u/s 317 of CrPC petition)

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

உடல்கூறாய்வு செய்வதற்கு காவல் துறையின் வேண்டுகோள் மாலை 04.00 மணிக்கு கிடைத்தது. பினக்கூறாய்வு மாலை 04.15-க்கு ஆரம்பித்தேன். உடல் கூறாய்வு செய்வதற்கு தனியாக தமிழ்நாடு மருத்துவ விதிகள் உள்ளது. உடல்கூறாய்வு காலை 10.00 மணி முதல் மாலை 04.00 மணிக்குள்ளாக செய்ய வேண்டும் என்றால் அது அவ்வாறு அல்ல. காலை 06.00 மணி முதல் மாலை 06.00 மணிவரை பகல் வேளையில் செய்ய வேண்டும். பினக்கூறாய்வுக்கான வேண்டுகோள் கடிதம் மாலை 04.00 மணிவரை பெறலாம்.

தற்போது 2023 ல் தமிழ்நாடு அரசால் தமிழ்நாடு Medico legal manual கொண்டுவரப்பட்டது. அந்த manual ல் பகலில்தான் பினக்கூறாய்வு செய்ய வேண்டும் என்று உள்ளது. அ.த.சா.ஆ.9 ல் பினக்கூறாய்வு வழங்கப்பட்ட தேதி 10ம் தேதி என்று கையால் திருத்தப்பட்டள்ளது என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் 9ம் தேதி அல்லது 10 ம் தேதி பினக்கூறாய்வு கொடுத்தாக குறிப்பிட்டு சொல்லவில்லை

என்றால் அது பற்றி நினைவில்லை. பினக்கூறாய்வு செய்தவற்கு முன்பு இறந்தவரின் மருத்துவ வரலாற்றை பார்த்தேனா என்றால் நினைவில்லை. பினக்கூறாய்வு செய்யப்பட்ட உதயசூரியன் அடுக்கம்பாறை மருத்துவனையில் சேர்க்கும்போது அவர் உயிருடன் வந்தாரா அல்லது இறந்தவின்னர் அவரது சடலம் அனுமதிக்கப்பட்டதா என்றால் அவருடைய பதிவேட்டை நான் பார்த்தேனா என்று நினைவில்லை.

அவர் மருத்துவமனைக்கு வந்த பின்னர் இறந்திருந்தால் அதற்கான மருத்துவ வித்து பதிவேட்டை பார்த்துதா'ன நான் பினக்கூறாய்வு செய்திருப்பேன் என்றால் அவ்வாறு நடந்திருந்தால் கொடுத்திருப்பார்கள். இறந்து வந்திரந்தால் Brought dead என்ற பதிவேட்டில் பதிந்த பின்னர்தான் பினக்கூறாய்வுக்கு அனுப்புவார்கள் என்றால் சரிதான். Brought dead பதிவேட்டை நான் பார்க்கவில்லை என்றால் அதை பார்க்க வேண்டிய அவசியல்லை.

அவசர சிகிச்சை பிரிவில் உதயசூரியனை யார் கொண்டு வந்து சேர்த்தார்கள், என்ன காயம், இறந்து கொண்டுவரப்பட்டாரா போன்ற விவரங்கள் அடங்கிய பதிவேட்டை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். இறுதி கருத்துரை கொடுப்பதற்கு முன்பு வழக்கு சொத்துக்ளை என்னிடம் போலீசார் காட்டி வாங்கவில்லை என்றால் சரிதான். சிராய்ப்பு காயம் கரடுமுரடான தரையில் குடிபோதையில் விழுந்திருந்தால் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரியல்ல. அந்த சிராய்ப்பு காயங்கள் கோடு போன்ற அழுந்திய காயங்கள் எனவே அது குடிபோதையில் விழுந்தால் ஏற்பட வாய்ப்பில்லை. மற்ற காயங்கள்

எல்லாம் கூர்மையான கற்கள் மீது விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையில் குடல் உள்ளுறுப்புகளை ரசாயன கூடத்திற்கு அனப்பினேன் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அதில் உடல் உள்ளுறுப்புகள்தான் தவறுதாலாக அது குடல் உள்ளுறுப்புகள் என்று தெரியாமல் தட்டச்சு செய்யப்பட்டிருக்கலாம். போலீசார் என்னிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பதிந்ததை என்னிடம் படித்து காண்பித்தார்களா என்றால் நினைவில்லை.

போலீசார் வாக்குமூலத்தில் இறந்தவரின் இரத்த மாதிரியை மூடி முத்திரையிடப்பட்ட உரையில் அனுப்பியதாக நான் சொல்லவில்லை என்றால் அந்த வார்த்தைகள் இல்லைதான். பகுப்பாய்வு அறிக்கையை ப்பற்றி சொல்லியுள்ளேன். அ.த.சா.ஆ.10 ல் இறந்துபோனவரின் உடலில் எத்தில் ஆல்கஷால் உள்ளது என்றும் அவரின் இரத்த வகை பற்றி குறிப்பிடபடவில்லை என்றால் அதில் வராது. உயிரியல் அறிக்கயில் வரும். என்னுடைய பினக்கூறாய்வு இயந்திரத்தனமாக கொடுத்துள்ளேன் என்றாலும் நான் சரிவர பினக்கூறாய்வு செய்யவில்லை என்றால் சரியல்ல.

என்னுடைய போலீசார் விசாரணையிலும் என்னுடைய அறிக்கையிலும் இறந்தவரின் தற்காப்பு காயத்தை பற்றி சொல்லவில்லை என்றால் தனியாக எடுத்து கூறவில்லை. உடல்கூறாய்பு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள காயங்கள் வேறு ஒரு பொருட்களால் எற்பட்டிருப்பின் அந்த பொருட்கிளில் இரத்தமோ திசுக்களோ இருக்கும் என்றால் சரிதான்.

சா.பொ.4 வெட்டுக்கத்தியில் இரத்ததிட்டோ திசுக்களோ இருக்கிறதா என்றால் தற்போது அதில் இல்லை.

2ம் எதிரியின் தரப்பில் 1ம் எதிரியன் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.

**மறுவிசாரணை – இல்லை.**

PERUMALSAMY MURUGAN
Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.02.10 17:50:41 +0530

10.02.2025

S.C.No.14 of 2020

P.W. 8 (அசோக் குமார்)

Crl.M.P.No. 169 and 170 of 2025 உத்தரவு நாள் 31.01.2025-ன் கீழ் அ.சா.8 அசோக் குமார் மீண்டும் வரவழைக்கப்பட்டு 1ம் எதிரி மற்றும் 2-ம் எதிரியின் தரப்பில் தனித்தனியாக குறுக்கு விசாரணை

(A1 present. A2 absent and his absence condoned u/s 317 of CrPC petition)

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை எப்போது எங்கு வைத்து விசாரித்தார்கள் என்று சரியாக நினைவில்லை. எனது வாக்குமூலத்தை போலீசார் கைப்பட எழுதினார்களா அல்லது தட்டச்சு செய்தார்களா என்றால் நினைவில்லை. போலீசார் என்ன வாக்குமூலம் கொடுத்தேன் என்று எனக்கு தெரியாது என்றால் அறிக்கையில் இருப்பதை வைத்து சாட்சியம் அளிக்கிறேன். போலீசார் வாக்குமூலத்தில் Item 3, 4ல் துரு ஏறிய கத்தி என்று குறிப்பிட்டுள்ளேன்.

அ.த.சா.ஆ.13 ல் Item 4ல் அவ்வாறான துரு இருப்பதாக குறிப்பு இல்லை என்றால் சரிதான். போலீசார் வாக்குமூலத்தில் அந்த சான்று பொருட்கள் மூடிமுத்திரையிடப்பட்ட உரையில் வந்ததா என்று நான் சொல்லவில்லை என்றால் நினவைில்லை. மூடிமுத்திரையிடப்படாத நிலையில் சான்று பொருட்கள் வந்தால் அதை நான் ஆய்வுக்கு உட்படுத்தக்கூடாது என்றால் சரிதான். அ.த.சா.ஆ.14ல் அந்த அறிக்கையை நீதித்துறை நடுவர், குடியாத்தத்திற்கு தான் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

அந்த நகல்தான் எங்களுக்கு வந்தது. அந்த அறிக்கையில் 5 வகையான சான்று பொருட்களில் அதில் இருந்த இரத்ததின் தொகுதியை அருதியிட்டு கூற இயலாது என்று சொல்லியுள்ளார்கள். ஆனால் அது மனித இரத்தமாகும். சென்னை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு பரிசோதனைக்கு பின்னர் சான்று பொருட்களை மூடி முத்திரையிடப்பட்ட உரையில் அனுப்பவேண்டும் என்றால் சரியல்ல.

சாதாரணமாகவும் அனுப்பலாம் ஆனால் அறிக்கையை மட்டும் மூடி முத்திரையிடப்பட்ட உரையில் அனுப்ப வேண்டும். மூடி முத்திரையிடப்படாமல் சான்று பொருடக்ளை அனுப்பும்பட்சத்தில் pamper செய்வதற்கு வாய்ப்புள்ளது என்றால் சரியல்ல. சில பொருட்களியல் உள்ள இரத்தத்தை swap மூலம்தான் அனுப்புவோம் என்பதை தற்போது தான் நீதிமனற்த்தில் சொன்னேன் எனறாலும் அதை இதற்கு முன்பு போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2ம் எதிரியின் தரப்பில் 1ம் எதிரியன் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.

**மறுவிசாரணை – இல்லை.**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.02.10 17:50:51 +0530

10.02.2025

S.C.No.14 of 2020

P.W. 9 (இருதயராஜ்)

Crl.M.P.No. 169 and 170 of 2025 உத்தரவு நாள் 31.01.2025–ன் கீழ் அ.சா.9 இருதயராஜ் மீண்டும் வரவழைக்கப்ட்டு 1–ம் எதிரி மற்றும் 2–ம் எதிரியின் தரப்பில் தனித்தனியாக குறுக்கு விசாரணை

(A1 present. A2 absent and his absence condoned u/s 317 of CrPC petition)

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.த.சா.ஆ.1 புகாரை நான்தான் பெற்று முதல் தகவல் அறிக்கையை நான்தான் பதிந்து அதற்கான குறிப்பை புகாரில் பதிந்தேன். குறிப்பில் உள்ள கையெழுத்தும் புகாரில் உள்ள கையெழுத்தும் நான் எழுதியதுதான் என்றால் சரியல்ல. புகாரையும் புகாரில் உள்ள குறிப்பு என்னால் எழுதப்பட்டதையும் தடய ஆய்வுக்கு அனுப்பினால் இரண்டையும் என்னால் எழுதப்பட்டது என்று தெரியும் என்றால் அனுப்பலாம்.

இவ்வாறான சூழ்நிலையில் சாட்சியின் குறுக்கு விசாரணை தடய அறிவியல் துறையின் அறிக்கை வரும்வரை ஒத்திவைக்கப்படுகிறது.

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.02.10 17:51:01 +0530